**தலைப்பு 123 – வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 123 – வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஒக்தோபர் 24 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

---

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 6,359.88 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 6,319.79 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 40.09 மில்லியன் அதாவது 0.63 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 643.19 | 628.68 | 14.51 | 2.26 |
| மூலதனம் | 5,716.69 | 5,691.11 | 25.58 | 0.45 |
| மொத்தம் | 6,359.88 | 6,319.79 | 40.09 | 0.63 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

அமைச்சிற்குரிய 12301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 15.00 | 7.69 | 7.00 | 8.39 | 50.00 | 22.39 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்திற்குரிய 7002/0000/00/0397/0015/000 ஆம் இலக்க கணக்கில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 63.76 ஆக இருந்தது.

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் கீழான 04 பொது வைப்புக் கணக்குகளுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 0.43 மில்லியனாக இருந்தது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
| --- | --- |
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0078/000 | 0.02 |
| 6000/0000/00/0002/0106/000 | 0.37 |
| 6000/0000/00/0013/0071/000 | 0.03 |
| 6000/0000/00/0015/0079/000 | 0.01 |
| மொத்தம் | 0.43 |

### 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

12301 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 799,878 ஆக இருந்தது. அந் நிலுவை மீதிகள் 1 ஆண்டு முதல் 24 ஆண்டுகள் வரையான காலவீச்சில் இருந்து வந்த போதிலும், 2015 திசெம்பர் 31 இல் அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

### 3.2 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அங்குலான 2 கட்ட செயற்திட்டம் மற்றும் திரிய பியச செயற்திட்டம் 2015 செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனினும்

செயற்திட்டத்திற்காக முறையே ரூபா 189.47 மில்லியன் மற்றும் ரூபா 176.69 மில்லியனும் அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் போது நகமு புறவர நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 376 மில்லியன் மதிப்பிடப்பட்டு 6,349 வீடுகளை திருத்தம் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் தகவல்களின் பிரகாரம் ரூபா 365.29 மில்லியன் அதாவது 97 சதவீதம் செலவிடப்பட்டு 51 சதவீத பௌதீக செயன்முன்னேற்றமொன்றை பெற்றுக்கொண்டிருந்தது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தகவல்களின் பிரகாரம் திருத்தியமைக்கப்பட்டிருந்த 1,305 வீடுகள் அல்லது எதிர்பார்க்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையில் 21 சதவீதமாக மாத்திரம் இருந்தன.

(இ) 2015 ஆம் ஆண்டின் போது செவன சரண வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் 5,000 வீடுகளுக்கு உதவிகள் வழங்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும், வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தகவல்களின் பிரகாரம் 316 வீடுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. செவன விசேட உதவிகள் முறைமையின் கீழ் 2,500 வீடுகளுக்கு உதவிகள் வழங்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும், வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தகவல்களின் பிரகாரம் 08 வீடுகளுக்கு மாத்திரம் உதவிகள் வழங்கப்பட்டிருந்தன. அரசினதும் தனியார் பங்களிப்பின் கீழ் பள்ளேகல பிரைம் லேண்ட் தோட்டத்திற்காக 39 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு வீடும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் மீதான நிலை பின்வருமாறு.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 27 | 25 | 04 | 02 |
| மூன்றாம் நிலை | 04 | 02 | 02 | - |
| இரண்டாம் நிலை | 107 | 93 | 14 | - |
| ஆரம்ப நிலை | 44 | 39 | 05 | |
| மொத்தம் | 182 | 159 | 25 | 02 |